# கழுகின் சத்தம்

## ஏப்ரல் 1, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

# அந்த நேரம் முதற்கொண்டு



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: அந்த நேரம் முதற்கொண்டு, 60-0716

81. இப்பொழுது, பரிசுத்த மத்தேயு 4-வது அதிகாரம் 17-ம் வசனத்திலிருந்து வெறுமனே ஒரு வரியை மட்டும் வாசிக்க விரும்புகிறேன்:

**அதுமுதல்** (From that time) **இயேசு:** ராஜ்யம்... **மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங் கிக்கத் தொடங்கினார்.**

82. இப்பொழுது, அந்த முதல் மூன்று வார்த்தை(களான) *அந்த நேரம் முதற் கொண்டு (From That Time)* என்ற, பொருளை எடுக்க விரும்புகிறேன். இப்பொ ழுது, *இன்ன இன்ன* நேரத்தில் என்று நினைவுகூரக்கூடிய எல்லாமே இங்கேயுள்ளது.

“அந்த நேரம் முதற்கொண்டு” என்று நாம் கூறுகிறோம். அந்தச் சிறு பையனையும், சிறு பெண்ணையும் போன்று, நாம் ஒரு *குறிப் பிட்ட* காரியத்தை செய்தோம் என்றும், *அதைப்போன்றதொரு காரியம்* நேரிட்டது என்றும் நம்மால் கூற முடியும், “அந்த நேரம் முதற்கொண்டு” காரியங்கள் நமக்கு மாறி விட்டன.

83. இன்றிரவு நாம் இங்கே இந்தப் பட்டணத்திற்குள் சென்று, இங்கே இந்தப் பள்ளத்தாக்கிலுள்ள, உங்களுடைய அழகான சிறு பட்டணத்தின் வீதிகளில் நடந்து திரியும் மிகவும் இழிவானதும் ஒழுக்கக்கேடானது மான பெண்களைக் காண முடியும். நான் அவள் பக்கத்தில் அமர்ந்து, நான், “பெண் மணியே, உன்னுடைய கதையை நீ என்னிடம் கூற விரும்புகிறேன்” என்று சொல்லுவீர் களானால்.

84. அப்பொழுது அவள் கூறத் தொடங்குவாள்; அவள் இவ்விதமான ஏதோவொன்றைக் கூறலாம்: “சகோதரன் பிரன்ஹாமே, நான் ஒரு லீலி புஷ்பத்தைப் போன்று அவ்வளவு பரிசுத்தமாக ஒரு நாளில் இருந்தேன். புகழ்வாய்ந்த அந்தஸ்துடைய ஜனங்கள் மத்தியில் நான் என்னுடைய தலை நிமிர்ந்தவாறு இருக்க முடிந்தது; நான் சபைக்குச் சென்று, அப்படியே அருமையாக உணர முடிந்தது. ஆனால் ஒரு இரவிலே நான் ஒரு குறிப்பிட்ட வாலிபனோடு வெளியில் இருந்ததொரு நேரம் வந்தது, அவன் இன்ப உணர்ச்சியைத் தூண்டுவதும் பழக்கத்திற்கு அடிமையாக்கிவிடக் கூடியதுமான ஆபத்தான வெறிமயக்கப் பொருள் வகையோடு (Coke) மதுபானத்தையும் எனக்கு கலந்துகொடுத்தான், அந்த நேரம் முதற்கொண்டு...” என்று.

85. அல்லது அவளோடு சென்று அவளை தூரமாயிருந்த ஒரு குறிப்பிட்ட நடனத்திற்கு வற்புறுத்தி (இணங்கவைத்த) விசுவாசியல்லாத வேறொரு பெண் சிநேகிதி யாக அது இருக்கலாம். அப்பொழுது அவள் ஏதோவொரு வாலிபனுடைய கைகளைப் பற்றிப்பிடித்தபோது, அந்த நேரம் முதற் கொண்டு. அது எப்போதுமே ஒரு நேரம் முதற்கொண்டுதான் சுட்டிக்காட்டப்படுகிறது.

86. அல்லது நான் இன்றிரவில் இங்கே உங்களுடைய பட்டணத்திற்குள் போய், உங்க ளிடம் இருப்பதிலேயே மிக மோசமான குடிகாரனைக் கண்டுபிடிக்கலாம். வாலிப மாகவோ அல்லது வயோதிபமாகவோ இருக் கும் அந்த மனிதனுடைய பக்கத்தில் நான் உட்கார்ந்து, அவனிடம், "நண்பா, நான் உன் னிடம் ஒரு காரியத்தைக் கேட்க விரும்பு கிறேன்: நீ இங்கே இந்தப் பட்டணத்தில் ஒரு-ஒரு பெரிய தொழிலாளியாக இருந்திருக்க

முடியும் என்னும்போது. நீ ஏதோவொரு சபையில் பணியாளனாகவோ, அல்லது ஏதோவொரு பெண்ணிற்கு ஒரு உண்மையான கணவனாகவோ, சில பிள்ளைகளுக்கு ஒரு தகப்பனாகவோ இருந்திருக்க முடியும் என்னும்போது, நீ உன்னுடைய வாழ்க்கையை இவ்விதமாக துஷ்பிரயோகம் செய்தது ஏன்? உன்னைக் குடிக்கும்படி செய்து நீ செய்கிறவிதமாக உன்னை செய்ய வைத்தது எது?" என்று கேட்டிருந்தால்; அல்லது, சில பிள்ளைகளுக்கு ஒரு-ஒரு உண்மையான தாயாகவோ, ஏதோவொரு கணவனுக்கு ஒரு இனிமையான, பாசமுள்ள மனைவியாகவோ இருந்திருக்கக் கூடுமான, குடிபோதையிலுள்ள ஏதோவொரு பெண்ணிடம் கேட்டிருந்தால்.

87. அவர்கள் இவ்விதம் (சொல்லத்) தொடங்கி, "நல்லது, ...முதற்கொண்டு. நான் ஒருகாலத்தில் மதுவிலக்கிற்கு ஆதரவளிக்கும் ஒரு நபராகத்தான் இருந்தேன். மது அருந்து

வதற்கு எதிராக கற்றுதந்த பாசமுள்ள ஒரு தாயும் தகப்பனும் எனக்கிருந்தார்கள். ஒரு சமயம் வாலிப பெண்கள் மத்தியில் மிகவும் பிரபலமான ஒரு குறிப்பட்ட பையனோடு ஐக்கியம் வைத்துக்கொண்டேன், நான்-நான்-நானும் பிரபலமாயிருக்க விரும்பினேன், எனவே அவனுடைய உயர்படிநிலையோடு நானும் சேர்ந்துகொள்ளலாம் என்று நினைத்தேன். அப்பொழுது நான் என்னுடைய தாய் தகப்பனின் அறிவுரைகளுக்கு விரோதமாக போய்விட்டேன். அவன், "'இன்றிரவில் நீ ஒரு நல்ல நேரத்தைக் கொண்டிருக்க விரும்பினால், நீ உனக்குள் கொஞ்சம் வெறியக் குடிபானங்களைப் பெற விரும்பினால்' என்று என்னை இணங்கச் செய்தபோது, நான் என்னுடைய முதலாவது மதுவை அருந்தினேன், அந்த நேரம் முதற்கொண்டு..."

88. அந்தவிதமாகத்தான் அது ஆரம்பிக்கிறது. இங்கே சமீபத்தில், நியூயார்க்கிலே,

பழமையான பெந்தெகோஸ்தே ஸ்தாபனத்தில் ஒன்றும், உலகத்திலேயே மிகப்பழமையான வைகளில் ஒன்றுமான நியூயார்க்கிலுள்ள பெத்தானி கூடாரமாகிய, சிஸ்டர் பிரவுன் கூடாரத்தில் (Sister Brown tabernacle), இப் பொழுது ஒரு மேய்ப்பராயிருக்கிற டாக்டர் பெர்க் அவர்கள்; நம்முடைய சகோதரர் களுக்கு அவர்களை நன்கு தெரியும் என்று ஊகிக்கிறேன்.

89. அவ்விடத்திலே, நான் அங்கே இருக் கையில், with her சென்று பௌரி தெருவில் (bowery - பௌரி என்பது நாடோடிகளும் குடிகாரர்களும் வீடில்லாமல் கைவிடப்பட்ட நிலையிலுள்ளவர்களும் வழக்கமாக செல்கிற (வசிக்கிற) மலிவான ஓட்டல்களும், மது அருந்தும் இடங்களும் உடைய நியூயார்க் பட்டணத்திலுள்ள ஒரு தெருவாகும் - மொழி பெயர்ப்பாளர்) வேலைபார்த்த, சலவைத் தொழில் செய்பவளும், சுவீடன் நாட்டுப்

பெண்மணியுமாகிய சோபியா அவர்களை நான் சந்திக்க வேண்டியிருந்தது. மஞ்சள் காய்ச்சல் நோய்க்கு தடுப்பூசி (yellow fever shot) போடும்படி நான் இரண்டு நாட்கள் தாமதம் செய்ய வேண்டியிருந்தது; அதை (தடுப்பூசியைப்) போட்டுக்கொள்ளாமலே நான் ஆப்பிரிக்காவுக்கு போய்விடலாம் என்று நினைத்தேன், ஆனால் நான் கடந்து செல்லவோ, அல்லது அந்தப் பெரிய விமா னத்திற்குள் போகவும் கூட அவர்கள் அனு மதிக்கவில்லை. மஞ்சள் காய்ச்சலுக்கான தடுப் பூசியை போட்டுக்கொள்ள கடற்படை கப்பல் களைக் கட்டுவதற்கும் பழுதுபார்க்கவுமான அந்த அரசாங்க கப்பல் பட்டறைகளுக்குப் (Navy yards) போக இரண்டு நாட்கள் நான் காத்திருக்க வேண்டியிருந்தது.

சகோதரன் பேர்க் அவர்கள் (Brother Berg), “நீர் என்ன செய்ய விரும்புகிறீர்?” என்று கேட்டார்.

நான், "பௌரி தெருவைப் (bowery) போய்ப் பார்க்க விரும்புகிறேன்" என்றேன்.

"சரி, நாம் போகலாம். எனக்கு அங்கே அநேக மிஷன் ஊழியங்கள் உண்டு" என்றார்.

90. நாங்கள் சென்றோம், நான்... எந்த மனிதனும் தன்னுடைய மகனை பௌரி தெருவிற்கு அழைத்துச்சென்று, அவனுக்குக் காண்பிப்பது ஒரு நல்ல காரியமாயிருக்கும் என்று நான் எண்ணுகிறேன். நீங்கள் எப்பொழுதாவது பிரான்சில் இருந்தால், உங்களுடைய மகளை பிகாலிற்கு (Pigalle) அழைத்து சென்று, மனித வாழ்க்கையானது எவ்வளவு சீரழியக்கூடும் என்பதை அவள் காணும்படி செய்யலாம் என்று நான் எண்ணுகிறேன்.

அவ்வண்ணமாக நான் பௌரி தெரு பக்கமாகப் போனபோது, மனிதர்கள் ஆதர வற்றவர்களாகப் படுத்துக்கிடக்க, வாந்தியினால் அவர்கள் முகத்தை ஈக்கள் மொய்த்துக்

கொண்டிருந்தன, மேலும் ஓ, போதைப் பொருளுக்கு அடிமைப்பட்டவர்களும், மட்டு மீறிகுடிக்கு ஆட்பட்டவர்களும் (இருந்தார் கள்).

91. நான், "ஓ, சகோதரன் பெர்க் அவர் களே, அநேகமாய் இங்கேயிருக்கும் இம்மனி தர்கள் தாங்கள் செய்கிறதைக் குறித்து கவலையேபடாத வீடுகளில் வளர்க்கப்பட்டு, இவர்கள் அப்படியே கட்டுப்பாடற்றவர்களாக தெருவில் போகவிடப்பட்டிருப்பார்கள்" என் றேன்.

92. அவர் தன்னுடைய கரத்தை என் தோளின் குறுக்கே வைத்து, "உமக்கு அதிர்ச்சியாக இருந்திருக்கும்" என்றார். அவர், "சரியாக இங்கே இந்த மிஷன் ஊழியத்தில், நாங்கள் - (செய்யப்) போகிறோம், சென்ற வருடத்தில் அங்கே மரித்துப்போன 180 பேரை வெளியேற்றினோம். வீதிகளிலிருந்து

வெளியே எடுத்து அவர்களுக்கு உணவு கொடுக்கவும் இன்னபிறவற்றையும் செய்த (போதிலும்) இறுதியாக அவர்கள் மரித்துப் போனார்கள்; கிறிஸ்துவுக்குப் புறம்பே இவர் களுக்கு எந்த நம்பிக்கையும் கிடையாது" என்றார்.

மேலும் அதன்பிறகு, (இவர்களைக்) குண மாக்குவது என்பது, இவர்கள் அதற்கு மிகவும் தூரமாக இருக்கிறார்கள். அவர், "இதோ, இம்மனிதன் இங்கேயிருக்கிறான். இவனை எனக்குத் தெரியும். இவனை எழுப்புங்கள்" என்றார்.

நான் அவனிடம் சென்று, "ஐயா, நான் உம்மிடம் பேசலாமா?" என்று கேட்டேன்.

அவர், "நல்லது, இவனால் பேச முடியா மல் இருக்கலாம்" என்றார்.

93. ஓ, அந்த மனிதன் இருந்த நிலையை என்னால் கூற இயலாது. அவனுடைய துணிகள் அவன் இடுப்பிலிருந்து கீழேயிருக்க ஒரு பயங்கரமான நிலையில் இருந்தான், அவன் (அவ்விதமான) ஒரு நிலையை அடைந்தவனாய், மேலெல்லாம் ஈரமாகவும் இருந்தது. அவன் அப்படியே மிக மோசமான ஒரு-ஒரு கோலத்தில், நாற்றமடித்தவனாயிருந்தான். நான், "ஐயா, நான் உம்மிடம் பேசலாமா?" என்றேன்.

94. சகோதரன் பெர்க் அவனை அசைத்துப்பார்த்தார். நான்... அவன் எழுந்தான். அவர், "நான் சகோதரன் பெர்க்" என்றார். நல்லது, அவனுக்கு சகோதரன் பெர்க்கைப் பற்றி எதுவும் தெரியாதிருந்தது. அவன் அப்பொழுதும் அளவுக்கு அதிகமாக மது அருந்தியிருந்தான்.

நான், “நான் உன்னிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்” என்றேன். “நீ எவ் விதமான வீட்டில் வளர்க்கப்பட்டாய்?” என்று கேட்டேன்.

அவன், “மது அருந்த போதிய பணம் எனக்கு தருவீர்களா?” என்று கேட்டான்.

95. அதற்கு நான், “நான் சுவிசேஷத்தின் ஒரு ஊழியக்காரன். நான் கர்த்தருடைய பணத்தை மது அருந்த ஒரு மனிதனுக்குக் கொடுக்க மாட்டேன். நான்... என்னிடம் இருக் கும் பணம் தேவனுடைய பிள்ளைகளிட மிருந்து வருகிறது, அது தேவனுடைய இராஜ் யத்திற்காகவே செலவழிக்கப்படுகிறது. நான் என்ன செய்வேன் என்று உனக்கு சொல்லு கிறேன்: நான் உனக்கு ஒரு சான்ட்விச் வாங்கித்தருகிறேன்; நான் உன்னுடைய பகல் சாப்பாட்டை உனக்கு வாங்கித்தருகிறேன் அல்லது... நீ என்னோடு வருவாயானால்.

ஆனால் நான் ஒரு ஊழியக்காரனாக, உன் னிடம் கேட்க விரும்புகிறேன்" என்றேன்.

அவனோ, "ரெவரண்ட் அவர்களே, மன்னித்துக்கொள்ளுங்கள்" என்றான்.

அதற்கு நான், "நல்லது, நீ எப்போதாவது எப்படி இவ்வித நிலையை அடைந்தாய்?" என்று கேட்டேன்.

அவன், "ஐயா, நீர் என்னுடைய கதையை நம்புவீரா என்று எனக்கு சந்தேகமாயிருக் கிறது" என்றான்.

"நல்லது," நான், "நான் உன்னை ஒரு மரியாதைக்குரிய மனிதனாகவே ஏற்றுக்கொள் கிறேன். நான்-நான் உன்னுடைய கதையை நம்புவேன், நீ என்னிடம் சொல்; உன்னுடைய இருதயத்திலிருந்து என்னிடம் சொல்" என் றேன்.

அதற்கு அவன், "ஐயா, நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட்டேன்" என்றான்.

அதற்கு நான், "அப்படியானால் இந்த நிலைக்கு வந்திருக்கிறாயே" என்றேன்.

96. அவன், "ஆம், ஐயா. எனக்கு மிகவும் அன்பான குடும்பம் இருந்தது: மூன்று பிள்ளைகள், இரண்டு மகன்களும் ஒரு பெண் பிள்ளையும், எப்பொழுதும் வாழ்ந்ததிலேயே மிகவும் இனிமையான மனைவியும் எனக்கு இருந்தார்கள்" என்றான். அப்பொழுது அவனுடைய பெரிய கண்ணீர்கள் அவனது வயதான, நரைத்த தாடி வழியாக ஓடத் தொடங்கியது. அவன், "நான் இங்கே ஒரு *குறிப்பிட்ட* மூலையிலுள்ள இந்த வங்கியின் தலைமை அதிகாரியாக இருந்தேன்" என்றான்.

அதற்கு நான், "அப்படியா?" என்றேன்.

அவன், "அந்த வங்கிக்குப் போய் அவர் களிடம் கேட்டுப்பாருங்கள்" என்றான்.

மேலும் அவன்... நான், "நல்லது, நீ இதைச் செய்ய காரணமாயிருந்தது எது?" என்று கேட்டேன்.

97. அவன், "ஐயா, ரெவரண்ட் ஐயா, ஒரு மாலையில் நான் வீட்டிற்கு வந்தபோது, அங்கே 'அன்புள்ள ஜான்' என்று ஒரு கடிதம் மேஜையின்மேல் இருந்தது. என்னு டைய மனைவி என்னைவிட்டுப் போய் விட்டாள். நான் ஒருபோதும் மது அருந்திய தில்லை, ஆனால் நான், "நான் ஏதாயினும் ஒன்றை செய்தாக வேண்டும், அல்லது நான் ஒரு கைத்துப்பாக்கியை எடுத்து என்னுடைய மூளையை வெடித்து சிதறும்படி செய்து விடுவேன்" என்று எண்ணி, நான் குடிக்க ஆரம்பித்தேன், இதோ நான் இருக்கிறேன்" என்றான்.

“தேவன் இரக்கமாயிருப்பாராக” என்று எண்ணினேன். பாருங்கள்?

On... “அந்த நேரம் முதற்கொண்டு...” அதுதான் அதை ஆரம்பித்துவைத்தது. நாம் எப்போதுமே ஒரு நேரம் முதற்கொண்டு (என்பதை) சிந்தித்துப்பார்க்க முடியும்.

98. அதன்பிறகு விவாகம் பண்ணுகிற வாலிப தம்பதிகளைப் போன்று. ஓ, அவர்கள் எவ்வளவு கூடுமோ அவ்வளவு அன்பான வர்களாக இருக்கிறார்கள். முதலாவது காரியம் உங்களுக்குத் தெரியுமா, தன்னுடைய குடும் பத்தை விட்டுபோன இந்தப் பெண்ணிடம் நான் போய், “பெண்மணியே, நீ உன்னுடைய குடும்பத்தைவிட்டுப் போகும்படி செய்தது என்ன? உனக்கு ஒரு அருமையான கணவன் இருந்தானே” என்று கேட்பேன் என்றால்.

99. “ஓ,” அவள் என்னிடம் கூறுவாள், அவள், “சகோதரன் பிரன்ஹாமே, நான்-நான்-

நான் வானத்திலிருந்து விழும் பனித்துளியைப் போன்று அவ்வளவு கள்ளங்கபடமில்லாதவளாகத்தான் இருந்தேன். நான் என்னுடைய புருஷனை விவாகம் செய்து, குணசாலியான பெண்ணாகத்தான் அவரிடம் வந்தேன். அவரும் ஒரு அருமையான மனிதராகத்தான் இருந்தார்; அவர் வேலை செய்து வியர்வை சிந்தி என்னைக் கவனித்துக்கொண்டார். பிள்ளைகளோ, என்னுடைய சிறு குட்டையான குண்டு பையன், அவன் பிறந்தபோது, கணவனார் அந்தச் சிறு மகனைத் தம்முடைய முதுகின்மேல் வைத்து, தரையில் மேலும் கீழுமாக தோள்களின்மேல் சுமந்தபடி ஊர்ந்துசெல்வதை என்னால் இப்பொழுதும் காண முடிகிறது. ஓ, என்னால் மாத்திரம் அந்த முந்தையை நிலைக்கு மறுபடியும் திரும்பிச்செல்ல முடியுமானால்" என்று கூறியிருப்பாள்.

நான், “நல்லது, என்ன நடந்தது?” என்று கேட்கும்போது.

100. அவள் இவ்விதமான ஏதோவொன்றைச் சொல்லியிருப்பாள்: “நல்லது, அதெல்லாம் சரியாகவே நடந்துகொண்டிருந்தது. ஒரு நாள், அழகான, சுருள்முடியும், பெரிய பழுப்புநிற கண்களும் உடைய பொருட்களை விற்பனை செய்யும் ஒருவன் (a salesman) கதவைத் தட்டினான், அந்த நேரம் முதற்கொண்டு...” என்று. பாருங்கள்? அவ்விதமாகத்தான் அது ஆரம்பிக்கிறது; முக்கியமாக நிகழ்ந்த ஒரு நேரத்தை நினைவுபடுத்துகிறது. சரியாக அதுதான் அதன் துவக்கமாக இருக்கிறது.

101. பாவமானது எப்போதும் தெருவிலுள்ள சாக்கடையில் தான் கிடக்கிறது என்று ஒருக்காலும் நினைக்கவே நினைத்துவிடாதீர்கள்; பாவமானது மிக அருமையாக

உடையுடுத்திக்கொண்டு அழகாயுள்ளது. நிச்சயமாக அவ்வாறு தான் உள்ளது. நான் எப்போதுமே, “சாத்தான் ஒரு டக்சிடோ சூட்டையும் (tuxedo suit), உயரமான பட்டிழை தொப்பியையும் அணிந்துகொண்டு, தன்னுடைய கையில் ஒரு கைத்தடியையும் வைத்திருக்கிறான்” என்று சொல்வதுண்டு. மோட்டார் சைக்கிளை ஓட்டிச்செல்லும் கும்பலைச் சேர்ந்த நீளமான தலைமயிர் கொண்ட அந்த பேச்சு நயமுடைய (வெளியே நேர்மையாகத் தோன்றுகிற) வாலிபனைக் குறித்து விழிப்புடன் இருங்கள் (எச்சரிக்கையாயிருங்கள் - மொழிபெயர்ப்பாளர்). அது சரியாக உள்ளது. சாத்தான் முட்டாள் அல்ல என்று உங்களுக்குத் தெரியும். எப்படி பொருத்தமான உடையணிந்து அதை கவர்ச்சிப்பது (வசீகரிப்பது, மயக்குவது, மனதை இழுப்பது - மொழிபெயர்ப்பாளர்) என்று அவனுக்கு-அவனுக்கு-அவனுக்குத் தெரியும், புரிகிறதா?

102. அது தன்னுடைய தொப்பியை கீழ் நோக்கி இழுத்தவண்ணமாக அங்கேயிருக்கும் பழங்கால சார்லி பார்லிகார்னாக எப்போதும் இருப்பது கிடையாது; சிலசமயங்களில் அது மிகவும் நேர்மையான ஒரு இருதயமாக இருக் கிறது. நெடுகிலுமாக தனக்கு உதவிபுரியும் ஒரு-ஒரு நல்ல துவக்கத்தை அல்லது ஏதோ வொன்றை அவன் கொண்டிருந்தால், அவன் சரியாகவே போய்க்கொண்டிருப்பான்; ஆனால் எப்போதுமே அவ்வாறு இருப்ப தில்லை. நான் அநேக நேரங்களில் (இதைக்) கண்டிருக்கிறேன், தங்களால் எவ்வளவு குறை கூற முடியுமோ அவ்வளவு குறைகூறும் ஜனங்களிடம் நான் நடந்து சென்றிருக்கிறேன்; நான் அவர்களை நோக்கிப்பார்ப்பேன், யார் என்னை நேசிக்கிறவர் என்றும் யார் நேசிப் பதில்லை என்றும் அறிந்துகொள்ள தேவன் மூலமாக நான் ஒரு வழியை உடையவ னாயிருக்கிறேன். உங்களுக்கு அது தெரியும்.

103. இந்நிலையில், முழுவதும் அழுக்காகவும் மற்றும் எல்லாமாகவும் இருக்கும் ஒரு மனிதனைப் பார்க்கும்போது, ஒருக்கால் தங்களுடைய கழுத்துப்பட்டையை திருப்பி, ஆடம்பரமாய் உடையுடுத்திக்கொண்டு, என்னுடைய முதுகில் தட்டிக்கொடுத்து, "ஓ, சகோதரன் பிரன்ஹாமே, நாங்கள் உம் பட்சத்தில் இருக்கிறோம்" என்று கூறிக்கொள்ளும் யாரோ ஒருவனைக் காட்டிலும் நான் இவனையே அநேக சமயங்களில் என்னோடு வைத்துக்கொள்ள அதிகம் விரும்புவேன். அவன் பொய்ச்சொல்லுகிறான் என்று சரியாக அப்பொழுதே அறிந்துகொள்வேன். பாருங்கள், புரிகிறதா? அதுதான் அது. ஒரு பொய்யனால் எனக்கு எந்த பயனுமில்லை (I've got no use for a liar). என்னே, நீங்கள் ஒரு திருடனிடமிருந்து மறைந்துகொள்ள முடியும், ஆனால் உங்களால் ஒரு பொய்யனிடமிருந்து

மறைந்துகொள்ள முடியாது. எனவே, அது-அது சரியே.

---

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை.)*

---



நீ இந்த உலகத்திலே ஒரு பிள்ளையைக் கொண்டு வந்து, அதைச் சரியாக வளர்ப்பாயானால், நித்தியம் முழுவதுமே அந்த ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாமே. அதோ அங்கே மகிமையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அந்த நட்சத்திரம், நீ அதனோடு சம்பந்தமுள்ளவளாக இருப்பாயே. புரிகிறதா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-10-02E தீர்க்கதரிசியாகிய எலிசா

33. இப்பொழுது. எலியா ஒரு - எலியா ஒரு கண்டிப்பான மனிதனாகவும், மிகவும் தைரியமானவனாகவும் இருந்தான், அவன் பூமியில் ஒரு திருஷ்டாந்தமாக வைக்கப் பட்டிருந்தான். இந்த மனிதனின் மூலமாக, தேவன் தம்முடைய தெய்வீக நியாயத் தீர்ப்புகளைக் காண்பிக்கும்படியாகவே, அவர் அவனை இங்கே வைத்திருந்தார். அவனுக்குப் பின்வந்த எலிசா ஒரு வாலிபனாக இருந்தான், அவனுக்கு மிக அதிக வயது இல்லை, தேவன் அவனை அழைத்தபோது, அநேகமாக அவனுடைய வயது நாற்பதுகள் அல்லது ஏதோவொன்றாக இருந்தது. அவன் எலியாவின் மேலிருந்த தேவனுடைய ஆவி

யின் இரட்டிப்பான பங்கைப் பெற்றிருந்தான், அது எலிசாவின் மேல் வந்திருந்தது. ஓ, அதோ சபையைக் குறித்த என்னவொரு முன்னடையாளம். பாருங்கள், தீர்க்கதரிசி யாகிய எலியா மேலே எடுக்கப்படுகையில், எலியா கேட்டிருந்தான்... எலிசா எலியாவிடம் கேட்டான், அல்லது அதற்கு மாறாக அது இருந்தது, எலியா எலிசாவிடம், "நான் உனக்காக என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாய்?" என்று கேட்டான்.

கவனியுங்கள், அவன் ஒரு மகத்தான காரியத்தைக் கேட்டான்: "உம்முடைய ஆவி இரட்டிப்பான பங்காக என்மேல் வரவேண் டும்" (என்று கேட்டான்).

34. இப்பொழுது, நாம் பெரிய காரியங் களுக்காக விண்ணப்பம் பண்ண வேண்டு மென்று வேதாகமம் விரும்புகிறது, "கர்த் தாவே, ஆமாம், நான் இப்பொழுது சபையைச்

சேர்ந்திருக்கிறேன். அது போதும்" என்று திருப்தியடைந்து விடாதீர்கள். இல்லை, அது எனக்குப் போதாது. நான் வேறு ஏதோ வொன்றைச் செய்ய விரும்புகிறேன்.

35. பெரிய காரியங்கள் தான் எனக்கு வேண்டும். "நல்லது, கர்த்தாவே, அவருடைய கிருபையினாலே, என்னுடைய சொந்த தனிப் பட்ட ஊழியத்தில், கிறிஸ்துவுக்காக பத்து லட்சம் ஆத்துமாக்களை உரிமை கோருகிறேன், பத்து லட்சம் ஆத்துமாக்களோ, அல்லது அதற்கும் அதிக ஆத்துமாக் களையோ நான் உரிமைகோருகிறேன்." நான் அதனோடு திருப்தி அடைந்துவிட மாட்டேன். எனக்கு கிறிஸ்துவுக்காக இருபது லட்சம் அல்லது முப்பது இலட்சம் ஆத்துமாக்கள் வேண்டும். எனக்கு சுவாசம் இருந்து, போகும் படி சக்தி எனக்கிருக்கும் காலம் வரையில், நான் அப்படியே தொடர்ந்து போய்க் கொண்

டிருக்க வேண்டும், நான் தொடர்ந்து போய்க் கொண்டிருக்க விரும்புகிறேன். ஏனென்றால் இதைச் செய்ய இயலுவதாக இருக்கப் போகிற ஒரே சந்தர்ப்பம் இது மட்டுமே. சரியாக இப்பொழுது தான் அந்த நேரமாக இருக் கிறது. பாருங்கள்? சரியாக இப்பொழுதே. இதைச் செய்யும்படி உங்களுக்கு சந்தர்ப்பம் இருக்கும் உங்களுடைய கடைசி முறை இதுவாக இருக்கலாம்.

36. தாய்மார்கள் பிள்ளைகளை வளர்க் கவும், பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கவும் எப்படி மறுத்து விடுகிறார்களோ என்று நான் சிலநேரங்களில் நினைப்பதுண்டு. வாலிப பெண்கள் கருத்தடை பண்ணிக்கொண்டு, சிறிய நாய்களை வாங்கி, அவைகளை சுற்றி லும் நடத்திச் செல்கிறார்கள். பெண்மணியே, தேவன் உனக்காக ஒதுக்கிக்கொடுத்து, உனக்கு இருக்கிறதும், தேவனுக்காக இந்த

மகத்தான கடமையை உன்னால் செய்ய இயலுவதாக இருக்கப் போகிறதுமான, ஏறக் குறைய உன்னுடைய இருபது ஆண்டுகால ஜீவியத்தை நீ மாத்திரம் உணர்ந்து கொள் வாயா? உன்னுடைய பிள்ளை ஒரு தற்கால பின்னியாகவோ, அல்லது-அல்லது அதைப் போன்ற ஏதோவொன்றாக இருக்கலாம் என்று உனக்குத் தெரியுமா? உன்னால்-உன்னால் பிள்ளைகளை வளர்க்க முடியும் காலம் வரை யில், வெறும் இருபது, ஏறக்குறைய உன்னு டைய ஜீவியத்தின் இருபது ஆண்டுகாலத் தில்... (அவ்வாறு உன் பிள்ளையை வளர்க்க லாம் என்று) நீ உணர்ந்துகொள்கிறாயா?

37. **நீ இந்த உலகத்திலே ஒரு பிள்ளையைக் கொண்டு வந்து, அதைச் சரியாக வளர்ப்பாயானால், நித்தியம் முழு வதுமே அந்த ஆசீர்வாதங்களை அனு**

**பவிக்கலாமே. அதோ அங்கே மகிமையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அந்த நட்சத்திரம், நீ அதனோடு சம்பந்தமுள்ள வளாக இருப்பாயே. புரிகிறதா?** அப்படி யானால், நீ சுற்றிலும் இங்குமங்குமாக ஓடிக் கொண்டிருந்து, அவ்விதமே தொடர்ந்து செய்து கொண்டிருப்பதையே அதிகம் விரும்புகிற காரணத்தினால், இந்தச் சிறு பிள்ளைகளை வளர்க்க மறுப்பது என்பது, அது அபத்தமாக இருக்கிறது. நீ அதைச் செய்ய கூடாது. இப்பொழுது, அதைச் செய் யாதே. இல்லை, ஐயா, நீ அதைச் செய்யாதே. நீ ஒரு சந்தோஷமான நபராக இருக்கிறாய்.

38. பழங்கால தாய்மார்கள், பிள்ளை களை வளர்க்க அவர்கள் விரும்பினார்கள். ஆனால், ஓ, நாம் இப்பொழுது ஜீவித்துக் கொண்டிருக்கும் இந்த நவீன அமெரிக்க காலம்: நம்முடைய தேசம் சுத்தமாக கறைப்

பட்டுவிட்டது. நான் பார்க்கிற பிரகாரமாக, இந்த தேசத்திற்கு ஒரு நம்பிக்கையுமே விடப்படவில்லை. பழம்பாணியிலான ஒரு எழுப்புதல் மாத்திரமே, வேதவாக்கியத்தின்படி அத்தகைய பழம்பாணியிலான எழுப்புதல் ஒருபோதும் நாடு முழுவதுமாக இருக்கவே இருக்காது. எனவே அப்படியானால், நாம் அப்படியே... இப்பொழுது, அவ்வாறு ஆகா திருக்கட்டும் (lest), தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள் மத்தியில் ஒரு எழுப்புதல் இருந்திருக்கிறது தான்; முழு தேசத்தையும் உள்ளே கொண்டு செல்கிற ஒரு உண்மையான வீசியடித்துக் செல்லும் ஒரு எழுப்புதல் அங்கே இருக்காது, அது ஒரு போதும் இருக்கவில்லை, அது ஒருபோதும் இருக்கவும் செய்யாது. சீக்கிரத்தில் வெளிப் படும், தேவனுடைய நித்திய இராஜ்யத்திற்கு வழி விட்டுக்கொடுக்கும்படியாக, மற்ற எல்லா இராஜ்யங்களையும் போன்று, இந்த மகத்தான

தேசமும் விழ வேண்டியிருக்கிறது. நாம் நமது தேசத்தை நேசிக்கிறோம், நிச்சயமாக நாம் நேசிக்கிறோம். ஆனால் இன்று அதில் தீட்டு (அசுத்தம்) இருப்பதைக் காணும்போது, அது நம்முடைய இருதயங்களை உடைத்துவிடு கிறது. ஓ, அது பயங்கரமாக உள்ளது. மேலும் அந்த நிலையைக் குறித்து, துர்நாற்றம் தேவ னுடைய நாசியில் ஏறிவிட்டது (reached)...

இப்பொழுது, எலியா, "நான் உனக்காக என்ன செய்யலாம்?" என்று கேட்கிறான், அவன் இங்கிருந்து போய்க் கொண்டிருந் தான்.

அவன், "உம்முடைய ஆவி என்மேல் இரட்டிப்பாக வர வேண்டும்" என்றான்.

39. அதற்கு அவன், "நீ ஒரு கடினமான காரியத்தைக் கேட்டிருக்கிறாய், ஆனால் இருந்த போதிலும், நான் போகும்போது, நீ

என்னைக் கண்டால், நீ வாஞ்சிப்பதை நீ கொண்டிருப்பாய்" என்றான். இப்பொழுது, அந்த வாலிபன் தொடர்ந்து தன்னுடைய கண்ணை அந்த வயதான தீர்க்கதரிசியின் மேலேயே வைத்துக் கொண்டிருப்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது, அவன் அசைகிற ஒவ்வொரு அசைவின் மேலும் தன்னுடைய கண்களை வைத்திருந் தான். அவன் போன ஒவ்வொரு வழியிலும், அவனோடு கூட இவனும் சென்றான், ஏனென்றால் அந்த ஆவியின் இரட்டிப்பான பங்கை இவன் விரும்பினான்.

உங்களுக்கு இரட்டிப்பான பங்கு தேவை என்றால், உங்கள் கண்களை இயேசுவின் மேலேயே பதித்திருங்கள். ஆமென். அது சரியே. அது என்னவொரு முன்னடையாள மாக இருந்தது.

இயேசு எடுக்கப்பட்ட போது, அது எலியாவுக்கு முன்னடையாளமாக இருந்தது, இப்பொழுது சபையானது வேண்டிக் கொண்டது... ஒரு தாய் தன்னுடைய இரண்டு குமாரர்களுக்காக, “இவன் வலது பாரி சத்திலும் இவன் இடது பாரிசத்திலும் உட் காரும்படி செய்தருளும்” என்று வேண்டுதல் செய்தாள்.

அதற்கு அவர், “அதைக் கொடுப்பது என் காரியமல்ல. ஆனால் நான் குடிக்கும் பாத்திரத்தில் (cup) உங்களால் குடிக்கக் கூடுமா?” என்று கேட்டார்.

அவள், “ஆம்” என்றாள்.

“நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறக் கூடுமா?” என்று கேட்டார்.

“ஆமாம்.”

40. அதற்கு அவர், “நீங்கள் அவ்வாறு செய்வீர்கள். அது உண்மை” என்றார். எனவே பிறகு ஒரு இரட்டிப்பான பங்கு. “நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியால், நான் செய்கிறவைகளை நீங்களும் செய்வீர் கள், இதைக் காட்டிலும் அதிகமானவை களையும் செய்வீர்கள்.” இயேசுவின் மேலி ருந்த ஆவியின் இரட்டிப்பான பங்கு, சபை யியிடம் வந்திருக்கிறது. பாருங்கள்?

41. இப்பொழுது, எலியாவின் ஆவியின் இரட்டிப்பான பங்கு எலிசாவின் மேல் வருகிறது, எலியா புரிந்த அற்புதங்களைப் போல இருமடங்கு அற்புதங்களை அவன் செய்தான். பரிசுத்த ஆவியின் இரட்டிப்பான பங்கு... இப்பொழுது, நீங்கள் இதைக் கவ னிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன், எலியாவுக்கு அடையாளமாக ஒரு மேலங்கி இருந்தது. ஒரு மேலங்கி என்பது அதில் தான்

அவன் சுற்றிப் போர்த்தப்பட்டிருந்தான். அது பரிசுத்த ஆவிக்கு ஒரு அடையாளமாக இருந்தது. அவன் மேலே போகையில், அவன் கவனித்தபோது, அந்த அங்கியானது ரதத்திலிருந்து திரும்ப விழுந்தது. அவன் அந்த அங்கியை தூக்கி, தன்னுடைய தோள் களின்மேல் வைத்துக்கொண்டு, யோர்தானுக்கு இறங்கிச் சென்று, அற்புதங்களைச் செய்ய ஆரம்பித்தான்.

42. இயேசு, அவர் தண்ணீரில் ஞானஸ் நானம் பண்ணப்பட்ட பிறகு, யோர்தான் நதி யில் அவர்மேல் வந்து, அவருக்குள் இருந்து, அவர் கொண்டிருந்த, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமாகிய அந்த ஞானஸ்நானம். பரிசுத்த ஆவியானவர் ஒரு புறாவைப்போல அவர்மேல் இறங்கிவருவதை யோவான் காண்பதாக, அவன் சாட்சியாகச் சொன்னான் (bare record). மேலும் கவனியுங்கள்,

அதன்பிறகு அவர் மேலே போன போது, அவர் போர்த்தப்பட்டிருந்த அதே அங்கியை திரும்ப அனுப்பினார், பரிசுத்த ஆவியானவர் சபையின் மேல்.

---

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை.)*



அந்த வயதான தாய் கழுகு, அங்கே, உயரே உட்கார்ந்துகொண்டு, அவைகளை கவனித்துக் கொண்டே இருந்தது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-06-24 ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது

3. அந்த பசி, ஆழம்... தாவீது சொன்னதுபோன்று "உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது..." (சங்கீதம் 42:7).

இப்பொழுது, ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது... உதாரணமாக, இங்கே ஒரு ஆழமானது. இருந்து கூப்பிட்டுகொண்டு இருக்குமானால், அந்த அழைப்பிற்கு பதிலளிக்க, அங்கே ஒரு ஆழம் இருக்கத்தான் வேண்டும். நான் இவ்விதமாக, அதை சற்று தெளிவுபடுத்தி கூறட்டும். நான் இயற்கையை பெரிதும் நேசிக்கிறவன்; நான் காட்டுக்குள்ளாக போகும்போது சூரியன்

அஸ்தமனமாவதை கவனிப்பேன். காட்டு மிருகங்களின் கூச்சல் சத்தத்தை கூர்ந்து கேட்பேன். என்னுடைய தாயார் பாதி சிவப்பு இந்தியர். அது சம்பந்தமாக, என்னுடைய இரத்தத்தில் இயற்கையை குறித்து ஏதோ இருக்கிறது, அதாவது, நான் அதை நேசிக்கிறவன். காட்டிலிருந்து அந்த சத்தத்தை நான் கேட்கும்போது, அங்கே ஏதோ ஒரு காரியம் என்னுடைய ஆத்து மாவை அனல் மூட்டுகிறது. என்னால், அதை தவிர்க்க முடியாது.

4. இங்கே, சமீபத்தில் நான், காலோ ரோடாவில் ஒரு உயரமான மலையின் மேலிருந்து, ஒரு வயதான தாய் கழுகை கவனித்துக் கொண்டிருந்தேன், அந்த தாய் கழுகானது, தன் குஞ்சுகளை தன் செட் டைகளின் மேல் சுமந்துகொண்டு வந்து, நல்ல புல் தரையிலே அவைகளை விட்டு

விட்டு, அங்கிருந்து பறந்துபோய், மிகவும் உயரமான, ஒரு மலை உச்சியில்போய் அமர்ந்து கொண்டது. அங்கிருந்து கொண்டு, அவள், தன் குஞ்சுகளை கவனிக்க துவங்கினாள்.

நானும் என்னுடைய தூரதரிசினி கண் ணாடியின் மூலமாய் இவைகளை கவனித் துக்கொண்டிருந்தேன்; என்னுடைய குதி ரையை ஒரு மரத்தில் கட்டிவைத்துவிட்டு, அதையே கவனித்துக் கொண்டிருந்தேன். நான், “கர்த்தாவே, இது அதிக பிரீதியா யிருக்கிறது” என்று சொல்லி, நான் அதை நுகர்வதுபோன்று கூட உணர்ந்தேன்.

5. நீங்கள், எப்பொழுதாவது கழுகின் கூட்டண்டைக்கு போயிருக்கிறீர்களா? கூர் மையான குச்சிகள் முதலான காரியங்களை கொண்டுதான் அவைகள் கூடுகளை

கட்டுகின்றன. அந்த சிறுகுஞ்சுகள், அந்த முட்கள் உள்ள குச்சிகளின்மேல் தான் நடக்கும் அதை தவிர்த்து அவைகளுக்கு வேறொன்றும் தெரியாது. ஆனால், ஒரு நாள் தாய் கழுகு, தன் செட்டைகளை விரித்து, அவைகளை அதன் செட்டை களின் மேல் ஏற்றிக்கொண்டு கீழே இறங்கி வந்து விட்டது. இப்பொழுது, நான் அந்த குஞ்சுகளை கவனித்தேன், அவைகளுக்கு, ஒரு பெந்தெகொஸ்தே எழுப்புதல் நடந்து கொண்டிருந்தது. அந்த மிருதுவான புல் தரையின்மேல் அவைகள், அங்குமிங்கும் ஓடிக்கொண்டும், பொருக்கிகொண்டும், ஒன்றையொன்று கொத்திக்கொண்டும், ஒன் றின் மேல் ஒன்று ஏறிக்குதித்துக் கொண் டும், அவ்வளவு சுதந்திரமாக இருந்தன.

6. நான், நல்லது, அதெல்லாம் சரிதான் என்று நினைத்தேன். உலகத்தின் பழைய

கூடுகளில் இருக்கின்ற, மனிதனை போன்று இது இருக்கிறது, பிசாசு, அவனுக்கு கொடுப்பது தவிர, வேறொன்றும் தெரி யாது. ஆனால், ஒருநாள், தேவன் அவனை தூக்கி எடுத்து, அவனை நிழலான பசும்புல் தரையின்மேல் கிடத்தினார். ஓ, எப்படி யாய் அவன் களிகூறுகிறான்; அவன் சுயா தீனமானவனாய் இருக்கிறான், அங்கே, தீங்கு செய்ய ஒன்றுமே இல்லை. ஏன், அந்த சிறிய குஞ்சுகள் பயமேயில்லாமல் இருக்கின்றது, என்று நான் நினைத்தேன்? அவைகள் தங்களை சுற்றிலும் இருக்கின்ற ஓநாய்கள், தங்களை தூக்கிகொண்டு போய் விடும் என்ற உணர்வே இல்லாமல் இருக் கிறதே, என்று வியந்தேன்? ஆனால், அடிக் கொருதரம் அவைகள் மேலே நோக்கிப் பார்க்கும். அந்த வயதான தாய் கழுகு, அங்கே, உயரே உட்கார்ந்துகொண்டு,

அவைகளை கவனித்துக் கொண்டே இருந்தது.

நான், நல்லது, தேவனுக்கு துதி உண் டாவதாக! அது சரியே! உலகத்தின் கூட்டி லிருந்து அவர் என்னை வெளியே எடுத்து, அவர் மகிமையின் அரணாகிய கொத்தளங் களின் மேல் ஏற்றிவைத்து, அங்கே உயரத் தில் உட்கார்ந்துகொண்டு, அவருடைய சுதந்தரத்துக்கு ஒரு தீங்கும் வராதபடி, காத்துக்கொண்டி ருக்கிறார். என்று நான் சிந்தித்தேன். ஒருகால் ஓநாய், அந்த சிறு கழுகு குஞ்சுகள் இருக்கிற அந்த பக்கமாய் வர ஆரம்பித்தால், அந்த தாய் கழுகு அதன் நகங்களால் அதனை கிழித்தே கொன்றுவிடும். அது சரி, சாத்தான் ஒரு விசுவாசியை பின் தொடர்ந்தால், அவ னுடைய கரத்தில் இயேசு கிறிஸ்துதான்

அகப்படுவார். அது சரி, ஆம், அவன் அவரை பிடித்து பார்க்கட்டும்!...

கொஞ்சங்கழித்து, அந்த தாய் கழுகு கவனித்துக் கொண்டிருந்தது, அவளுடைய மகத்தான கெம்பீரமான தலையைத் உயர்த்தி சுற்றிப்பார்த்தது. அவள் மிக உயரமான சிகரத்தின்மேல் அமர்ந்திருந் தாள், ஏனென்றால், அங்கிருந்து எல்லா வற்றையும் பார்க்கமுடியும். அவளுடைய கூர்மையான கழுகு கண்கள் கவனித்துக் கொண்டிருந்தது. கொஞ்சம் கழித்து, அவள் தன் தலையை உயர்த்தினதை நான் கண்டேன். என்னுடைய பத்து மடங்கு சக்தி வாய்ந்த தொலைநோக்கியின் மூலமாக, அவள் தன் தலையை உயர்த்தி, சுற்றி பார்க்கிறதை நான் கண்டேன், அப் பொழுது, அங்கிருந்து அவள் பறக்க

துவங்கினாள். நான் அது என்ன என்று எண்ணினேன்.

7. “எங்கோ தொலைவில், வடபாகத்தில், ஒரு வடதிசை காற்று துவங்கியது; இடி முழங்கினது. அவள் ஒரு கூச்சலிட்டு நேராக பறந்து கீழே வந்து, தன் செட்டைகளை புல் தரையின் மேல் விரித்ததும், அந்த கழுது குஞ்சுகள் ஒவ்வொன்றும், வேகமாய் அதன் செட்டைகளின் மேல் ஏறிக்கொண்டது. ஒருகால் கூண்டை விட்டு புறப்படும்போது, அவைகளுக்கு எப்படியாய் சொல்லித்தரப் பட்டதோ, அப்படியே நடந்துகொண்டது. அவைகளுடைய சிறிய கால்களால் சிறகுகளை கெட்டியாக பிடித்துக்கொண்டன. அவைகளுடைய, வாயை கீழாக கொண்டுபோய், அதன் அலகுகளால் இறகுகளை கெட்டியாக பிடித்துக் கொண்டன. உடனே, அந்த தாய் கழுகுதன்

குஞ்சுகளை, செட்டைகளின்மேல் சுமந்து கொண்டு, நேரடியாக உயரே எழும்பி, 50 மைல் வேகத்தில் அடிக்கும் காற்றைக் கிழித்துக்கொண்டு, நேராக கன்மலை வெடிப்புக்குள் சென்று மறைந்தது.

**நான், "ஏதோ ஒரு மகிமையின் நாளிலே இந்த எழுப்புதலெல்லாம் ஓய்ந்த பிறகு, அவர் மகிமையிலிருந்து வந்து, அவருடைய மகத் தான வல்லமையின் செட்டைகளை விரிப் பார், அப்பொழுது இந்த சிறிய கழுகு குஞ்சு கள், அவைகளின் அலகுகளால் செட்டை களை இறுக பற்றிக்கொண்டு, அவரோடு கூட, மகிமைக்கு பறந்து போவோம்" என்று நினைத்து, ஒரு சிறு குழந்தையை போல அழத் தொடங்கினேன்.**

# தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வேண்டிய ஒவ்வொரு காரியத்திற்கும், அவர்கள் அவரையே நம்பியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.



செய்தி: சபையானது உபத்திரவத்திற்கு முன்னரே சென்றுவிடுமா?, Para 33

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

---

**இயேசுவானவர் எப்பொழுதுமே உங்களுடைய வாசலில் நின்றிருந்து கதவைத் தட்டிக் கொண்டிருக்கப் போவதில்லை. அவர் போதும் என்று அளவுக்கு தட்டிக் கொண்டிருக்கப்போவதில்லை அவர் போதும் என்ற அளவுக்கு தட்டி முடித்துவிட்டு திரும்பிப் போய்விடும் நேரம் ஒன்று வரும். அப்பொழுது நீங்கள் அவருடைய கதவைத் தட்டுவீர்கள், ஆனால் நீங்கள் ஒரு போதும் அவரை கண்டு கொள்ளவே முடியாது. வருவதற்கான நேரம் இருக்கையில் வந்து விடுங்கள்.**



**செய்தி: 60-12-11E**
**லவோதிக்கேயா சபையின் காலம், Para 276**

# கழுகின் சத்தம்

## ஏப்ரல் 1, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து